## DEPOSITION OF WITNESS

## In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 75 /2019.** | | |
| **PW/DW/CW** | : | **PW1** | | |
| **Name** | : பழனியம்மாள் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : Alagar | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( A2 present, Others absent 317 CrPC petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02.08.2023

---

**முதல் விசாரணை:**

1. நான் எ.கன்னியம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். புகார்தாரர் கருப்பசாமி எனது மகன். புகார்தாரர் இறந்து சுமார் ஒரு வருடம் ஆகிறது. எதிரிகளை எனக்கு தெரியும். சம்பவம் நடந்து சுமார் 10 வருடம் இருக்கும். சம்பவதினத்தன்று காலை 09:00 மணியளவில் நான், எனது மகன், மருமகள் ஆகியோர் வீட்டில் இருந்தபோது ஏற்கனவே காலையில் எனது மகனை தோட்டத்தில் வைத்து அடித்த எதிரிகள் வீட்டிற்குள் அந்த நேரத்தில் வந்த எதிரிகள் முத்துப்பாண்டி, பிச்சைபாண்டி, முனியம்மாள், பாண்டீஸ்வரி ஆகியோர் வீட்டிற்குள் வந்து எதிரி முத்துப்பாண்டி எனது மகன் கருப்பசாமியை கல்லைக்கொண்டு முதலில் எறிந்தார், பின்பு எதிரி பிச்சைபாண்டி உலக்கையால் எனது மகனை அடிக்க வந்தபோது எதிரி முத்துப்பாண்டி அதனை பிடிங்கி எனது நெஞ்சில் அடித்துவிட்டார்.

2. எனது மருமகள் சித்ராவை எதிரி பாண்டீஸ்வரி விளக்கமாறால் அடித்துவிட்டார். எதிரி பாண்டீஸ்வரியின் அம்மா முனியம்மாள் எனது மருமகளின் முடியை பிடித்து இழுத்துவிட்டார். எதிரிகள் எங்களை அடித்துவிட்டு சென்றுவிட்டார்கள், நாங்கள் அதன்பின்பு நடந்த சம்பவத்திற்காக காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். எனக்கு உலக்கையால் நெஞ்சில் அடிபட்டது அன்றிலிருந்து நான் வேலைக்கு செல்லமுடியவில்லை, வீட்டில் தான் இருந்து

வருகிறேன். எனது மகன் மனவருத்தத்தில் மருந்தை குடித்து இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

3. எனது மகன் எப்போது புகார் கொடுத்தார் என்றால் அன்றையதினமே புகார் கொடுத்துவிட்டார். சம்பவ சமயத்தில் எனது மகன் ஒட்டன்சத்திரத்தில் தான் குடியிருந்தார் என்றால் சரிதான். வீட்டில் நடந்த சண்டைக்கு முன்பாக தோட்டத்தில் நடந்த சண்டை சம்பந்தமாக எனது மகன் புகார் கொடுத்தாரா என்றால் கொடுத்தாரா என்று தெரியவில்லை. எதிரி பாண்டீஸ்வரியை எனது மகன் வீட்டிற்குள் சென்று கையை பிடித்து இழுத்து தகாத முறையில் நடந்து கொண்டது சம்பந்தமாக ஊரில் பஞ்சாயத்து வைத்து எங்களுக்கு அது சம்பந்தமாக விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான். அந்த பிரச்சினை சம்பந்தமாக பேசி தான் உறவுமுறையில் எனது மகனை கொஞ்சம் நாட்கள் வெளியூரில் இருக்க சொன்னார்கள் என்றால் சரிதான். எனது மகன் புகார் கொடுத்த பின்பு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரி பிச்சைபாண்டி என்னை உலக்கையால் அடிக்கவில்லை என்றால் சரியல்ல, எதிரி பிச்சைபாண்டி அடிக்க வந்ததை அவரது தம்பி வாங்கி எனது நெஞ்சில் குத்திவிட்டார்.

4. எனது மகன் கருப்பசாமியை ஊருக்குள் விடாததால் நானும் எனது மகனும் சேர்ந்து எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயமும், எனது மகன் கருப்பசாமிக்கு ஏற்பட்ட காயமும் எதிரிகளால் ஏற்படவில்லை என்றும் தடுமாறி கீழே விழுந்ததால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு தடுமாறி கீழே விழுந்த காயத்தை வைத்து பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன முறையில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

S.d./ Palaniammal

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.